சார்பு நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்

**Case No. MCOP. 73/2013**

2025ம் ஆண்டு ஜுன் மாதம் 23ம் நாள் திங்கட்கிழமை

மனுதாரர் தரப்பு சாட்சியாகிய **ம.சா.2**-இல் வாக்குமூலம் ஆக்ட் 10/1873-ம் ஆண்டின் ஏற்பாட்டின்படி திரு.வ.சிவக்குமார், எழுத்தர் நிலை 2 என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு, திறந்தவெளி நீதிமன்றத்தில் நீதிபதியின் முன்னிலையில், நேரடியான கவனத்திலும், கண்காணிப்பிலும் வாய்மொழி சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஆறுமுகம் | தொழில் | டிரைவர் |
| தந்தை பெயர் | கோவிந்தசாமி | ஜாதி | |
| கிராமம் | பூசிமலைகுப்பம் | சமயம் | |
| தாலுக்கா | ஆரணி | வயது | 54 |

**23.06.2025 முதல் விசாரணை**

நான் இம்மனுவின் மனுதாரர் தரப்பு சாட்சி ஆவேன். என் ஆதார் அட்டை நகல் தாக்கல் செய்கிறேன். ஆதார் அட்டை நகல் அசல் ஆவணத்துடன் சரிபார்க்கப்பட்டது. என் தரப்பு சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மையானது தான். என் ஆதார் அட்டை நகல் தாக்கல் செய்கிறேன். ஆதார் அட்டை நகல் (அசல் ஆவணத்துடன் சரிபார்க்கப்பட்டு) **ம.சா.ஆ.13** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**குறுக்கு விசாரணை**

1. விபத்து சமயத்தில் தமிழரசனுடன் நான் தான் சென்றேன். நான் கொள்ளைமேடு பூசிமலைகுப்பத்தில் வசித்து வருகிறேன். இறந்துபோன தமிழரசனும் அதே ஊரை சேர்ந்தவர். 1ம் எதிர்மனுதாரர் ராமன் என்பவரும் அதே ஊரை சார்ந்தவர் என்றால் சரிதான். விபத்து வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்களா என்றால் இல்லை. விபத்து சம்மந்தமாக நான் கொடுத்த புகாரின் மீது ஆரணி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு முடிவு செய்யப்பட்டதா என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் நான் சாட்சியம் அளிக்க சென்றேனா என்றால் இல்லை. 1ம் எதிர்மனுதாரர் ராமன் டிராக்டரின் உரிமையாளர் என்றாலும் விபத்து சமயத்தில் டிராக்டரை ஓட்டியவரும் அவர் தான் என்றால் சரிதான். இறந்துபோன தமிழரசன் விபத்து நடந்த டிராக்டரின் அங்கீகரிக்கப்படாத நபராக பயணம் செய்தார் என்றால் சரிதான். ராமன் விபத்து நடந்த சமயத்தில் அந்த வாகனத்தை ஓட்டுவதற்கான உரிமம் இருந்ததா என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. இறந்து போன தமிழரசன் டிராக்டரின் இடதுபக்க மட்காடில் அமர்ந்து சென்ற போது தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். விபத்து நடந்த சமயத்தில் அந்த இடத்தில் என்னை தவிர வேறு நபர்கள் இருந்தார்களா என்றால் இருந்தார்கள். இவ்வழக்கின் சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை எதுவும் வரவில்லை. மனுதாரர்கள் அழைத்ததன் பேரில் சாட்சியம் அளிக்க வந்திருக்கிறேன். மனுதாரர்கள் அழைத்ததன் பேரில் விபத்து பற்றி எதுவும் தெரியாமல் மனுதாரருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்க வந்திருக்கிறேன் என்றால் சரியல்ல.